


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 252 | 06.03.2026 | FRIDAY | MAASI : 22 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 252 | 06.03.2026 | வெள்ளிக்கிழமை | மாசி : 22 | விலை : ரூ.5/-

## சமஸ்கிருதத்தை வளர்ப்பதில் மட்டுமே

# "மத்திய அரசுக்கு அக்கறை!"

தஞ்சாவூர்: மார்ச்.6-

"சமஸ்கிருதத்தை வளர்ப்பதில் மட்டுமே மத்திய அரசு அக்கறை காட்டுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் சமஸ்கிருத வளர்ச்சிக்காக மட்டும் மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ.2,500 கோடி. ஆனால் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மத்திய அரசு ஒதுக்கிய தொகை வெறும் ரூ.147 கோடி" என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

தஞ்சாவூர் கரந்தை தமிழ்ச் சங்கத்தில், இன்று காலை முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி சிலை, தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் ச.ராமநாதன் சிலை ஆகியவற்றை திறந்து வைத்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியது: "வரலாற்று சிறப்புமிக்க இந்த இடத்தில் கருணாநிதி சிலை, ராமநாதனின் சிலையை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. இந்த தமிழ்த் தாய் வாழ்த்தை முதலில் பாடிய இடம் இந்த தமிழ்ச் சங்கம் தான். அதன்பின்னர் 1970ம் ஆண்டில் மு.கருணாநிதி தமிழ்த் தாய் வாழ்த்தை தமிழக அரசின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலாக அறிவித்தார்.

ஆனால், இது வெறும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் தான், இதற்கு எழுந்து நின்று நாம் மரியாதை செலுத்த தேவையில்லை என ஒரு கூட்டமும், சிலர் சட்டப் பேரவையில் இந்த பாடலை பாடக் கூடாது என ஒரு கூட்டமும் சொல்கின்றனர்.



1911ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தச் சங்கம், தற்போது 100 ஆண்டுகளைக் கடந்து தமிழ்ச் சேவையை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. தமிழுக்கு வருகிற ஆபத்துகளை எதிர்ப்பது ஒரு பக்கம், தமிழின் பெருமையைப் பரப்புவது இன்னொரு பக்கம் என இந்தச் சங்கத்தின் பணிகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என 1920ம் ஆண்டில் முதலில் தீர்மானம் நிறைவேற்றியதும், தமிழ் மொழிக்கு தனிப் பல்கலைக் கழகம் தேவை என தீர்மானம் நிறைவேற்றிய இடமும் இதுவே. இதைவிட கூடுதல் சிறப்பு என்னவென்றால், 1937ம் ஆண்டில் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியைத் திணிக்கும்போது அதை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியதும் இந்தக் கரந்தை தமிழ்ச் சங்கம்தான்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மகளிரைப் பங்கேற்க வைத்தவர் இந்தப் பகுதியை சேர்ந்த அன்னை தர்மாம்பாள் என்பவர் தான். அப்போது தொடங்கிய இந்தி மொழி திணிப்பு தற்போது வரைக்கும் நடைபெற்று வருகிறது.

அதுமட்டுமில்லாமல், தற்போது புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் தமிழ்நாட்டுக்குள் எப்படியாவது இந்தி மொழியை திணித்து விட வேண்டும் என மத்திய அரசு முயற்சிக்கிறது. தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய கல்வி நிதி ரூ.3,500 கோடியை வழங்காமல் தடுக்கின்றனர்.

மும்மொழி கொள்கையை ஏத்துக்கிட்டால் தான் நிதியை வழங்குவோம் என மத்திய அரசு கூறுகிறது. ஆனால், தமிழக முதல்வர் ரூ.10 ஆயிரம் கோடி கொடுத்தாலும், தமிழகத்தில் இந்தி, சமஸ்கிருத்துக்கு இடம் இல்லை என கூறிவிட்டார்.

அதேபோல் மிசா சட்டம் வந்தபோது, திமுகவுக்கு பொதுக்குழு கூட்டம் நடத்த தமிழகத்தில் யாரும் இடம் தரவில்லை. அப்போது இடம் கொடுத்த ஒரே இடம் கரந்தை தமிழ்ச் சங்கம் தான். இந்த சங்கத்தின் மீது தலைவர் கருணாநிதிக்கு எப்போதும் பற்றும், பாசமும் உண்டு.

தமிழின் தொன்மையை வெளி உலகக்துக்கு எடுத்துரைக்கும் வகையில், வேறு சொல் ஒப்பீட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. தமிழறிஞர்களுக்கு விருதுகளும், தேசிய சர்வதேச விருதுகளைப் பெற்ற எழுத்தாளர்களுக்கு வீடுகளும் தமிழக முதல்வர் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

தமிழில் உள்ள அரிய நூல்கள் பல இன்றைக்கு டிஜிட்டல் வடிவில் மாற்றப்படுகிறது. தமிழில் இருக்கக்கூடிய சிறந்த நூல்கள் இன்றைக்கு உலகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. அதேபோல் உலகின் சிறந்த நூல்களை எல்லாம், தமிழில் கொண்டுவர முயற்சிகளை தமிழகஅரசு எடுத்து வருகின்றது.

தமிழ் வளர்ச்சிக்கு தமிழக அரசு இன்றைக்கு ஏராளமான பணிகளைச் செய்து கொண்டு வருகிறோம். ஆனால் மத்திய அரசு சமஸ்கிருதத்தை வளர்ப்பதில் மட்டுமே அக்கறை காட்டுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் சமஸ்கிருத வளர்ச்சிக்காக மட்டும் மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ.2,500 கோடி. ஆனால் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மத்திய அரசு ஒதுக்கிய தொகை வெறும் ரூ.147 கோடி.

'தமிழ் தமிழ்' என்று சொல்லி இன்றைக்கு மக்களை ஏமாற்றுகின்ற வேலையை மத்திய அரசு செய்து வருகிறது. அந்த ஏமாற்று வேலைகளை எல்லாம் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும். உண்மையாகத் தமிழுக்காக உழைப்பவர்கள் யார், போலித்தனமாக நடிப்பவர்கள் யார், என்பதை மக்களுக்கு நாம் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும்" என்று அவர் பேசினார்.

## "நாங்குநேரியில் ரத்த ஈரம் காய்வதற்குள் மற்றொரு சம்பவம்!" அரசு மீது இபிஎஸ் சாடல்



சென்னை: மார்ச்.6-

இடைக்காட்டூர் கிராமத்தில் அரங்கேறிய கொலைவெறித் தாக்குதலில் தொடர்புள்ள அனைவரின் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி யுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் கிராமத்திற்குள், இருசக்கர வாகனங்களில் அரிவாள் மட்டும் பட்டாக் கத்திகளுடன் வந்த ஒன்பது மர்மநபர்கள், கண்ணால் கண்டவர் மீது கொடூரத் தாக்குதல் நடத்தியுள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சி யளிக்கிறது.

இதே மாதிரியான தாக்குதல் 2 நாட்களுக்கு முன்பு தான் நாங்குநேரி அருகே உள்ள பெரும்பத்து கிராமத்தில் நடந்துள்ளது. அதன் ரத்த ஈரம் காய்வதற்குள் அதேபோன்ற தொரு தாக்குதல் மீண்டும் நடக்கிறது என்றால், இவை சொல்லவரும் செய்தி என்ன?

சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய முதலமைச்சர், ஒரு கையாலாகாத வெறும் பொம்மை முதல்வராக இருக்கிறார் என்பது தானே?

திமுக அரசின் "குற்றவாளிகள் கைது" நடவடிக்கையைக் கண்டு குற்றவாளிகள் யாரும் பயந்த மாதிரியே தெரியவில்லை. பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் புகுந்து தைரியமாக இப்படி ஒரு கொலைவெறித் தாக்குதல் நடக்கிறது என்றால், இங்கே நடக்கும் சமூக அநீதி திமுக அரசு இதையெல்லாம் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது என்று தானே மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்?

இப்படி மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய முதல்வர் என்ன செய்துக் கொண்டிருக்கிறார் தெரியுமா? "முடிந்துவிட்டது" என தான் காட்டிய சைகை வைரல் ஆனதாக வெட்டிப் பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்.

உங்கள் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முடிந்துவிட்டது. பெண்கள் பாதுகாப்பு முடிந்துவிட்டது. சமூக நீதி முடிந்துவிட்டது. மொத்தத்தில், தமிழக மக்களின் நிம்மதியே முடிந்துவிட்டது.

இப்படி முடிந்துவிட்டதை எல்லாம் திரும்பப் பெற ஒரே வழி, உங்களுடைய விடியா ஆட்சிக்கு முடிவு கட்டுவதே. அதை மிக விரைவில் தமிழக மக்கள் சிறப்பாக செய்ய காத்திருக்கிறார்கள்.

இடைக்காட்டூர் கிராமத்தில் அரங்கேறிய கொலைவெறித் தாக்குதலில் தொடர்புள்ள அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 'கரூரின் 4 தொகுதிகளிலும் திமுக அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறும்' செந்தில் பாலாஜி

கரூர்: மார்ச்.6-

2021ம் ஆண்டு தேர்தலை விட கரூர் மாவட்டத்தின் 4 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறுவோம் என முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்த நாளையொட்டி கரூர் மாநகராட்சி 47வது வார்டான கோடங்கிப்பட்டியில் இன்று சில்வர் அண்டா பரிசு வழங்கும் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்து மக்களுக்கு பரிசு வழங்கினார். கரூர் மாநகராட்சி துணை மேயர் ப.சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியது: முதல்வர் ஸ்டாலின் 73வது பிறந்த நாளையொட்டி கரூர் மாவட்டத்தில் 4 சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட 3.30 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மாவட்டம் முழுவதும் 1 வார காலத்திற்குள் இப்பணிகள் நிறைவடையும்.

கடந்த 2021ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நிலையில் கரூர் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மேலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களை சந்திக்கும் போது அவர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். அவர்கள் முதல்வருக்கு தங்கள் முழு ஆதரவை தெரிவிக்கின்றனர்.

2021ம் ஆண்டு தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளிலும் உதய சூரியன் சின்னம் வெற்றி பெற்றது. 2026ம் ஆண்டு தேர்தலிலும் 4 தொகுதிகளிலும் கடந்த முறை பெற்ற வாக்குகளை விட மிக அதிக வாக்குகள் பெற்று உதய சூரியன் வெற்றி பெறும்.

காங்கிரஸ் கூட்டணி குறித்து எதிர்க்கட்சி ஆசைகளை தெரிவித்திருந்தன. தோழமை கட்சிகளுக்கு உரிய மரியாதை கொடுத்து அரவணைத்துச் செல்பவர் முதல்வர். அதனை தேர்தல் கூட்டணியாக கருதாமல் தொடர்ந்து தோழமையுடன் தொடர்வார்.

தோழமை கட்சிகளுக்கு உரிய மரியாதை வழங்குவதில் இந்தியாவிலே சிறந்த ஆளுமையாக திகழ்பவார். சில நேரங்களில் தோழமை கட்சிகள் மாற்றுக் கருத்துகள் கொண்டிருந்தாலும் அவர்களை அரவணைத்து செல்வார்.

பாஜக, அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தங்கள் இருப்பைக் காட்டிக்கொள்ள திமுகவை விமர்சித்து வருகின்றன. இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் உள்ள 1,111 வாக்குச் சாவடிகளிலும் 'வெல்லும் தமிழ் பெண்கள்' திட்டத்தில் மகளிர் வீடு வீடாக சென்று அரசு திட்டங்களை எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

எதிர்பார்ப்பதற்கு மேலாக 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றிப்பெற்று 2வது முறை ஸ்டாலின் முதல்வராவார் என்றார்.

## ஓபிஸ் அணி கிளைச் செயலாளர்கள் 10 பேர் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

சின்னாளபட்டி, மார்ச்.6

திண்டுக்கல் மாவட்ட திமுக அலுவலகத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட ஓ.பி.எஸ். ஆணியைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் எஸ்.பி.பசும்பொன் தலைமையில் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட கிளைச் செயலாளர்கள் கோட்டைப்பட்டி பொன்னுச்சாமி, ஆதிதிராவிடர் நகரைச் சேர்ந்த முருகன், அம்மா பேரவை மாவட்ட தலைவர் கஜேந்திரன், கோட்டைப்பட்டி நல்லான், வள்ளுவர் நகர் கிளைச் செயலாளர் பொன்னுச்சாமி, தோப்புப்பட்டி சேசுராஜ், புளியராஜக்காபட்டி பாண்டியராஜ், இளைஞரணி கோட்டைப்பட்டி கார்த்திக், அய்யம்பாளையம் மனோகரன், கட்டசின்னாம்பட்டி வினோத்குமார், மகளிர் அணியைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்ட கிளைச்செயலாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் ஆகியோர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து திமுகவில் இணைந்தனர்.



இதுபோல மேற்கு தொடர்ச்சி மலை கிராமமான பன்றிமலை ஊராட்சி அழகுமடையைச் சேர்ந்த அதிமுகவினர் 10 பேர், திமுக முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் தமிழ்ச்செல்வி, திமுக ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் முத்துக்கிருஷ்ணன் தலைமையில் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்துப் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, தாய் கழகமான திமுகவில் இணைந்த உங்களை மகிழச்சியுடன் வரவேற்கிறேன். வருகின்ற சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியின் வெற்றிக்கு பாடுபட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், மார்க்கிரேட் மேரி, மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் பொன்மணி, திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டி.பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, பன்றிமலை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் தேவிகா ராகவன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, காளீஸ்வரி மலைச்சாமி, சுமதிகணேசன், மாவட்ட பிரதிநிதிகள் எல்லை. ராமகிருஷ்ணன், இளங்கோவன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், மாநகர 8வது வார்டு செயலாளர் மார்க்கெட் சக்திவேல், அழகுமடை கிளைச்செயலாளர் ஜோதி சண்முகம், அமைதிச்சோலை கிளைச் செயலாளர் கணேசன், உட்பட இளைஞரணியினர், மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுவதாக நிதிஷ் குமார் அறிவிப்பு



பாட்னா, மார்ச்.6-

மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட இருப்பதாகத் தெரிவித்துள்ள பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், மாநிலத்தில் அமைய உள்ள புதிய அரசுக்கு தனது முழு ஆதரவும் வழிகாட்டுதலும் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், ''இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நீங்கள் என் மீது நம்பிக்கை வைத்து உங்கள் ஆதரவை அளித்து வருகிறீர்கள். இந்த வலிமை மூலம்தான் நாங்கள் பிஹாருக்கும் உங்கள் அனைவருக்கும் முழுமையான விசுவாசத்துடன் சேவை செய்து வருகிறோம். உங்கள் நம்பிக்கை மற்றும் ஆதரவின் காரணமாகவே பிஹார் இன்று வளர்ச்சியுடன் கூடிய மரியாதையின் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. இதற்காக நான் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது பொது வாழ்க்கையின் தொடக்கத்தில் இருந்து பிஹார் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் நாடாளுமன்றத்திலும் உறுப்பினராக வேண்டும் என்று நான் விரும்பினேன். எனவே, இந்த முறை மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட விரும்புகிறேன்.

பிஹார் மக்களுடனான எனது இந்த உறவு எதிர்காலத்திலும் தொடரும் என்றும், வளர்ச்சி அடைந்த பிஹாரை உருவாக்க ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான எனது உறுதிப்பாடு அசைக்க முடியாததாக இருக்கும் என்றும் நான் மனமார உறுதியளிக்கிறேன். பிஹாரில் அமைய உள்ள புதிய அரசாங்கத்துக்கு எனது முழு ஆதரவும் வழிகாட்டுதலும் இருக்கும்'' என்று தெரிவித்துள்ளார்.

வரும் மாநிலங்களவை தேர்தலில் பிஹாரில் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் கட்சி 2 இடங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளது. இதில் ஒன்றில் நிதிஷ்குமாரும் மற்றொன்றில் மத்திய அமைச்சர் ராம்நாத் தாக்கூரும் போட்டியிட உள்ளனர். மாநிலங்களவைக்குப் போட்டியிட உள்ளதால் நிதிஷ் குமார் முதல்வர் பதவியில் இருந்து விலக உள்ளார். அடுத்த முதல்வராக பாஜகவைச் சேர்ந்த ஒருவர் பதவியேற்பார் என்றும், நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த் குமார் துணை முதல்வராகப் பொறுப்பேற்பார் என்றும், நிதிஷ் குமார் விரைவில் மத்திய அமைச்சராக பொறுப்பேற்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈரான் விவகாரம் - "சுயாட்சி உரிமையில் பிரதமர் மோடி சமரசம்" ராகுல் காந்தி



புதுடெல்லி, மார்ச்.6-

''நாட்டை வழி நடத்த ஒரு உறுதியான தலைமை நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால், இந்தியாவின் தன்னாட்சியை ஒப்படைத்துவிட்ட சமரசம் செய்து கொண்ட பிரதமர்தான் நமக்கு உள்ளார்'' என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இலங்கை அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் 'ஐஆர்ஐஎஸ் டேனா' என்ற ஈரான் போர்க்கப்பல் மீது அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் நடத்திய தாக்குதலில் அதில் இருந்த 87 வீரர்கள் உயிரிழந்தனர். இந்தக் கப்பல் இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் கடந்த மாதம் நடந்த மிலன் 2026 கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றது. பயிற்சி முடிந்து ஈரானுக்கு திரும்பிக் கொண்டிருந்த நிலையில், இந்த போர்க்கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி உள்ளது.

இந்த தாக்குதலுக்கு ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், ''ஈரான் கடற்கரையிலிருந்து சுமார் 2,000 மைல் தொலைவில் கடலில் அமெரிக்கா ஒரு கொடூரச் செயலை நிகழ்த்தியுள்ளது. இந்திய கடற்படையின் விருந்தினராக இருந்த டேனா (Dena) என்ற போர்க்கப்பல், சர்வதேச கடல் பகுதியில் எச்சரிக்கையின்றி தாக்கப்பட்டது. அதில் சுமார் 130 கடற்படையினர் இருந்தனர்.

என் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள்: அமெரிக்கா உருவாக்கிய இந்த முன்னுதாரணத்துக்காக அந்த நாடு கடுமையாக வருந்த வேண்டிய நிலை வரும்'' என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த விவகாரத்தைச் சுட்டிக்காட்டி ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ''உலகம் தற்போது அதிர்வுகளால் நிரம்பிய ஒரு கட்டத்திற்குள் நுழைந்துள்ளது. கடுமையான சவால்கள் காத்திருக்கின்றன.

இந்தியாவின் எண்ணெய் விநியோகம் ஆபத்தில் உள்ளது. நமது இறக்குமதிகளில் 40%க்கும் மேற்பட்டவை ஹோர்முஸ் நீரிணை வழியாக நடப்பவை. அந்த பாதை தற்போது மூடப்பட்டுள்ள நிலையில், எல்.பி.ஜி மற்றும் எல்.என்.ஜி விநியோகத்தில் நிலைமை இன்னும் மோசமாகக்கூடும்.

இந்த மோதல் நம் வீட்டின் (நாட்டின்) வாசலுக்கே வந்துவிட்டது. இந்தியப் பெருங்கடலில் ஓர் ஈரானிய போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதமர் இதுவரை எதையும் கூறவில்லை.

இப்படிப்பட்ட நேரத்தில், நாட்டை வழிநடத்த ஒரு உறுதியான தலைமை நமக்குத் தேவை. ஆனால் அதற்கு பதிலாக, இந்தியாவின் மூலோபாய தன்னாட்சியை ஒப்படைத்து சமரசம் செய்து கொண்ட பிரதமர்தான் நமக்கு உள்ளார்'' என தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீநகர் மத்திய சிறை கண்காணிப்பாளராக முதன்முறையாக பெண் அதிகாரி நியமனம்



ஸ்ரீநகர், மார்ச்.6-

ஸ்ரீநகர் மத்திய சிறையின் கண்காணிப்பாளராக முதன்முறையாக பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை மாலை வெளியான அரசு உத்தரவின்படி, ஜம்மு காஷ்மீரில் உள்ள வெவ்வேறு சிறைகளுக்கு 4 அதிகாரிகள் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஸ்ரீநகர் மத்திய சிறைக்கான பொறுப்பு 2012ம் ஆண்டு பேட்ச் அதிகாரி சபா ஷாலுக்கு வழங்கப்பட்டது. சபா ஷால் இந்த நியமனத்துக்கு முன், ஜம்மு காஷ்மீர் சிறைகள் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் அதிகாரியாக பணியாற்றினார்.

ஜம்மு காஷ்மீர் சிறைகள் துறையில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் அவர் பணியாற்றியுள்ளார். ஸ்ரீநகரில் வசதியான மக்கள் வசிக்கும் பிர பாக பகுதியில் வசிக்கும் சபா ஷால், சமூகப் பணியில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். கடந்த 2012ல் காஷ்மீர் அரசுப் பணிகள் தேர்வாணைய தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

இவரை அறிந்த அதிகாரிகள் கூறுகையில், "சபா ஷால் தனது பணியில் நன்கு தேர்ச்சி பெற்றவர். நிறைந்த அனுபவம் கொண்டவர். இருப்பினும் இது அவருக்கு ஒரு சவாலான பணியாகவே இருக்கும். என்றாலும் சிறைத் துறையை அவர் நன்கு அறிந்தவர் என்பதால் திறம்பட பணியாற்றுவார் என நம்புகிறோம்" என்றனர்.

ஜம்மு காஷ்மீரின் பழமையான சிறைகளில் ஸ்ரீநகர் சிறையும் ஒன்றாகும். அரசியல் கைதிகள் உட்பட 900க்கும் மேற்பட்டோர் இங்கு அடைக்கப்பட்டுள்ளனர். காவல் துறை மட்டுமின்றி மத்திய தொழிலக பாதுகாப்பு படையும் இதற்கு பாதுகாப்பு அளிக்கிறது.

கடந்த காலங்களில் வெளி நாட்டு தீவிரவாதிகள், பிரிவினைவாத தலைவர்கள் பலர் இந்த சிறையில் இருந்தனர். பிறகு இவர்களில் பெரும்பாலானோர் கோட் பல்வால், ஜம்மு உள்ளிட்ட நகரங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்றப்பட்டனர்.

# நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்பட்ட ஹோலி

புதுடெல்லி, மார்ச்.6-

இந்தியா முழுவதிலும் நேற்று ஹோலி பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

வண்ணம் பூசுதல், சேற்றை இறைத்தல், உடைகளை கிழித்து விளையாடுதல் என பல்வேறு வகையில் மக்கள் ஹோலியை கொண்டாடி மகிழ்ந்தனர். புராண வரலாற்றின் அடிப்படையில் ஹோலி பண்டிகை நாளில் 'ஹோலிகா தெஹன்' எனும் பெயரில் ஒரு சடங்கு நடத்தப்படுகிறது. இதற்காக, 10 நாட்கள் முன்பாக ஒவ்வொரு நகரம் அல்லது கிராமங்களின் முக்கிய சந்திப்புகளில் காய்ந்த மரக்கிளைகளை கொண்டுவந்து குவிக்கின்றனர்.



இதற்கு நாள்தோறும் அப்பகுதி பெண்கள் பூஜை செய்கின்றனர். ஹோலிப் பண்டிகை நாள் அதிகாலையில் பூஜை செய்த பின் அந்த விறகுகளை எரிக்கின்றனர். தீ கொழுந்து விட்டு எரியும்போது மகிழ்ச்சி பொங்க ஆர்ப்பரிப்பதுடன், அந்த தீயை தங்கள் வீட்டுக்கு எடுத்து வந்து புதிதாக அடுப்பை மூட்டுவார்கள். இந்த சடங்குடன் ஹோலி பண்டிகை நேற்று தொடங்கியது.

மக்கள் ஒருவர் மீது ஒருவர் வண்ணப் பொடிகளை பூசியும், வண்ண நீரை பீய்ச்சி அடித்தும், திலகமிட்டும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும் இனிப்புகளை பரிமாறிக் கொண்டனர். உ.பி.யில் கிருஷ்ண ஜென்ம பூமியாக கருதப்படும் மதுராவில் ஹோலி பண்டிகை பிரசித்தி பெற்றது. அங்கு சுமார் 10 நாட்கள் முன்பாகவே ஹோலி தொடங்கி விடுகிறது.

பிருந்தாவனின் புகழ்பெற்ற 'பாங்கே பிஹாரி' கிருஷ்ணன் கோயிலில் பலவண்ண செயற்கை மழையுடன் கொண்டாடப்படும் ஹோலி உலகப் புகழ் பெற்றது. உ.பி., பிஹார், ம.பி. உள்ளிட்ட வடமாநிலங்களில் சற்று வித்தியாசமாகவும் ஹோலி கொண்டாடப்பட்டது.

மதுராவின் பர்ஸானா பகுதியில் ஆண்களைப் பெண்கள் தடியால் அடித்துக் கொண்டாடும் ஹோலி மிகவும் ரசிப்புக்குரியதாக இருந்தது. மதுராவில் நவுஹில், சுரிர் ஆகிய இடங்களை சுற்றியுள்ள கிராமங்களில் வண்ணங்களின் ஹோலிக்கு மறுநாள் சேற்று மண் வீசி ஹோலியை கொண்டாடுகின்றனர். இந்த உற்சாகம் இன்று நண்பகல் வரை தொடரும். இந்த வகை ஹோலி, மதுராவில் பல ஆண்டுகளாகத் தொடர்கிறது.

இதேபோல், ஹோலிக்கு மறுதினம் ஆண்கள் ஒருவருக்கு ஒருவர் குர்தா, பைஜாமாவை கிழித்துக் கொண்டு விளையாடுகின்றனர். உ.பி., பிஹாரின் சில பகுதிகளில் மட்டுமே இவ்வாறு கொண்டாடப்படுகிறது.

# மாநிலங்களவைத் தேர்தல்: தமிழக காங்கிரஸ் வேட்பாளராக கிறிஸ்டோபர் திலக் அறிவிப்பு!



சென்னை, மார்ச்.6-

காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாநிலங்களவை வேட்பாளராக கிறிஸ்டோபர் திலக் அறிவிக்கப்பட்டுள்ளார். திருச்சியை சேர்ந்த இவர், காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளராக உள்ளார்.

தமிழகத்தில் 6 மாநிலங்களவை இடங்கள் காலியாகிறது. இதில் 4 இடங்கள் திமுகவுக்கும், 2 இடங்கள் அதிமுகவுக்கும் கிடைக்கும். திமுக தனது 4 இடங்களில் ஓர் இடத்தை காங்கிரஸ் கட்சிக்கும், இன்னொரு சீட்டை தேமுதிகவுக்கும் ஒதுக்கியது. மீதமுள்ள இரு இடங்களில் திருச்சி சிவா மற்றும் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

மாநிலங்களவைத் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது. இந்தச் சூழலில், காங்கிரஸ் சார்பில் தமிழகத்திலிருந்து கிறிஸ்டோபர் திலக் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த அறிவிப்பை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் வெளியிட்டுள்ளார்.

திருச்சியை சேர்ந்த கிறிஸ்டோபர் திலக், காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளராகவும், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களுக்கான காங்கிரஸ் பொறுப்பாளராகவும் உள்ளார்.

ராகுல் காந்தியின் நம்பிக்கையை பெற்ற இவர், இளம் தலைமுறை காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவராக உள்ளார். தமிழகத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்களான சுதர்சன நாச்சியப்பன், திருநாவுக்கரசர், தங்கபாலு உள்ளிட்டோர் ராஜ்யசபா சீட்டை பெற தீவிரமாக முயற்சித்த நிலையில், இளம் தலைமுறையை சேர்ந்த கிறிஸ்டோபர் திலக்குக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம் சுப்ரமணியபுரத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் ஆய்வு செய்தார்.

# "திமுக ஆட்சியில் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களில் நடவடிக்கையே இல்லை" தினகரன்



சென்னை, மார்ச்.6-

'திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டுகளில் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டிருக்கும் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் இடைக்காட்டூர் கிராமத்திற்குள் புகுந்த அடையாளம் தெரியாத கும்பல் கண்ணில் படும் அனைவரையும் அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் கண்மூடித்தனமாகத் தாக்கிய காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் ஊருக்குள் புகுந்து பெட்ரோல் வெடிகுண்டு வீசியும், பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் உயிரிழந்த சம்பவம் ஏற்படுத்திய அதிர்வலைகள் அடங்கும் முன்பாகவே, தற்போது அரங்கேறியிருக்கும் கொலை வெறித் தாக்குதல் சம்பவம் ஒட்டுமொத்த பொது மக்கள் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. திமுக ஆட்சிப்பொறுப்பேற்ற ஐந்தாண்டுகளில் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டிருக்கும் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காததன் விளைவே, தற்போது ஊருக்குள் புகுந்து கொலை வெறித் தாக்குதல் நடத்தும் அளவிற்கான துணிச்சலைக் கொடுத்திருக்கிறது.

எனவே, மானாமதுரை அருகே கிராமத்தில் புகுந்து கொலை வெறித் தாக்குதல் நடத்திய அனைவரையும் கைது செய்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தும் நேரத்தில், மக்கள் பாதுகாப்பைப் புறந்தள்ளிவிட்டு அடுத்த தேர்தலுக்கான விளம்பரப் பணிகளில் மும்முரம் காட்டிவரும் திமுக வரும் சட்டமன்ற தேர்தலில் வரலாற்றுத் தோல்வியைச் சந்திப்பது உறுதி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# பஹல்காம் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்த வழக்கு தீவிரவாதிகள் சீனாவில் கேமரா வாங்கியது அம்பலம்

ஜம்மு, மார்ச்.6-

காஷ்மீரின் பஹல்காமில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள், சீனாவில் அதிநவீன கேமரா வாங்கியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சீனாவிடம் உதவிகள் கோர தேசிய புலனாய்வு ஏஜென்சிக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கி உள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி பாகிஸ்தான் ஆதரவு லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் சுற்றுலா பயணிகள் 25 பேர், உள்ளூர் குதிரை பராமரிப்பாளர் ஒருவர் என 26 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து தேசிய புலனாய்வு ஏஜென்சி (என்ஐஏ) விசாரணை நடத்தி வருகிறது. பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு என்ஐஏ அதிகாரிகள் காஷ்மீர் முழுவதும் தீவிர சோதனை நடத்தினர்.




அப்போது 'கோ புரோ' கேமரா உட்பட அதிநவீன கருவிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றை ஆய்வு செய்தபோது, பஹல்காமில் தாக்குதல் நடத்துவதற்கு முன்பே சீனாவின் டாங்குவான் நகரில் கேமரா வாங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த தகவலை ஜம்முவில் உள்ள விசாரணை நீதிமன்றத்தில் என்ஐஏ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, விசாரணையின் அடுத்தகட்டமாக சீனாவிடம் உதவி கோர நீதிமன்றத்தில் இருந்து சட்டப்பூர்வமான அனுமதி கடிதம் அனுப்ப வேண்டும் என்று என்ஐஏ கோரியது. அதை ஏற்று கடந்த திங்கட்கிழமை நீதிமன்றம் அனுமதி அளித்தது. இந்த கடிதம் விரைவில் மத்திய வெளியுறவுத் துறை மூலம் சீன அரசுக்கு ஆதாரங்களுடன் அனுப்பி வைக்கப்பட உள்ளது.

இந்த கேமரா மற்றும் அதிநவீன கருவிகளை வாங்கியது யார், அந்த கேமரா கடையில் இருந்து தீவிரவாதிகளின் கைகளுக்கு எப்படி சென்றது என்பதை கண்டுபிடிக்க உதவும்படி இந்த கடிதம் மூலம் சீன அரசை என்ஐஏ கேட்டுக் கொள்ளும். இதுதொடர்பாக என்ஐஏ டிஐஜி சந்தீப் சவுத்ரி அனுப்பிய கோரிக்கைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்கெனவே அனுமதி வழங்கி விட்டது.

இப்போது நீதிமன்றமும் அனுமதி வழங்கி உள்ளதால், விரைவில் சீன அரசிடம் உதவி கேட்டு சட்டப்பூர்வமான கடிதம் அனுப்பி வைக்கப்படும். 'கோ புரோ ஹீரோ 12 பிளாக் கேமரா' மாடல், எண் சி 3501 3254 71706 உட்பட பல்வேறு கருவிகளை காஷ்மீரில் என்ஐஏ அதிகாரிகள் கைப்பற்றி உள்ளனர். இதில், சீனாவில் கேமரா வாங்கி பஹல்காம் தாக்குதலுக்குத் தீவிரவாதிகள் பயன்படுத்தி உள்ளனர்.

இது குறித்து கோ புரோ பிவி கம்பெனிக்கு விவரம் கேட்டு என்ஐஏ ஏற்கெனவே கடிதம் அனுப்பி இருந்தது. அதற்கு கோ புரோ பிவி கம்பெனி அனுப்பிய பதிலில், "சம்பந்தப்பட்ட கேமரா சீனாவில் விநியோகஸ்தராக செயல்படும் ஏதி குரூப் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பின்னர் அந்த கேமரா குவான்டாங் மாகாணம் டாங்குவான் நகரில் கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி ஆக்டிவேட் செய்யப்பட்டுள்ளது. ஆனால், விநியோகஸ்தரிடம் பொருட்கள் சென்ற பிறகு, அவற்றை யார் யார் வாங்குகிறார், யார் பயன்படுத்துகிறார்கள் போன்ற விவரங்கள் எங்களிடம் கிடையாது. கேமராவை வாங்கியது யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டுமானால் சீன அதிகாரிகளால்தான் முடியும்" என்று கூறிவிட்டது.



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை இட்டமொழி ரோட்டில் அமைந்துள்ள வளரும் பதி ஐயா நிழல் தாங்கலில், அய்யா வைகுண்டரின் 194 வது அவதார தின விழாவை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, திசையன்விளை நகர காங்கிரஸ் தலைவர் ஏவிஜே. ஆல்பர்ட் பரிசுகளை வழங்கினார். அருகில் நகர செயலாளர் சங்கர், நகர துணைத் தலைவர் ஆரஞ்சு முருகேசன், அமைப்பு சாரா நகரத் தலைவர் பேச்சிமுத்து வேலுத்தாய், இவர்களுடன் திரைப்பட தயாரிப்பாளரும் சக்கர வியூகம் மாவட்ட செய்தியாளருமான டிபி.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், மதுரை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில், மதுரை ஒலிம்பிக் அகாடமிக்கான செயற்கை இழை டென்னிஸ் ஆடுகள விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். அமைச்சர்கள் மூர்த்தி,முனைவர் பழனிவேல் தியாகராஜன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, முதன்மைச் செயலாளர் சத்யபிரதசாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தளபதி, வெங்கடேசன், பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை தமிழ்நாடு ஹோட்டல் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, மதுரை மண்டலம் கரூர், திண்டுக்கல், மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களை சார்ந்த வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் உள்ளிட்ட தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, துணை தலைவர் திரு.கான் முகமது, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# திருப்பரங்குன்றம் தீப வழக்கு: ஐவர் குழுவுக்கு பதிலாக கோயில் குருக்களை பூஜை செய்ய அனுமதிக்க அரசு தரப்பில் யோசனை

மதுரை, மார்ச்.6-

நீதிமன்றம் தெரிவிக்கும் 5 பேர் குழுவுக்கு பதில் கோயில் குருக்களை பூஜை செய்ய அனுமதிக்கலாம் என திருப்பரங்குன்றம் தீப வழக்கில் அரசு தரப்பில் யோசனை தெரிவிக்கப்பட்டது. திருப்பரங்குன்றம் கார்த்திகை தீப வழக்கின் நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தன.மதுரை மாநகர காவல் ஆணையர், காவல் துணை ஆணையர், கோயில் செயல் அலுவலர், அறங்காவலர் குழுவினர் ஆஜராகினர். அறங்காவலர் குழு தரப்பில், நீதிமன்றம் தெரிவிக்கும் 5 பேர் கொண்ட குழுவை பூஜை செய்ய அனுமதிப்பது தொடர்பாக ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.



காவல்துறை சார்பில், நீதிமன்றம் தெரிவிக்கும் புதிய நடைமுறையை செயல்படுத்த போதிய அவகாசம் தேவை எனக் கூறப் பட்டது. அறங்காவலர் குழு தரப்பில் 2 வார அவகாசம் கோரப்பட்டது.பின்னர் நீதிபதி, நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்ததாதற்கு அறங்காவலர் குழுவினரையும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சேர்க்கலாமா என நீதிபதி கேள்வி எழுப்பினார். அரசு தரப்பில், இந்த அவமதிப்பு வழக்கு விசாரணைக்கே உகந்ததல்ல.இந்த ஆண்டு கார்த்திகை திருவிழா வின்போது தீபத்தூணிலும் தீபம் ஏற்ற வேண்டும் என பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தொடரப்பட்ட மேல் முறையீட்டு வழக்கில் 2 நீதிபதிகள் அமர்வு ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அடுத்த ஆண்டும் தீபம் ஏற்றப்பட வில்லை என்றால் மட்டுமே இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிக்க முடியும். 2 நீதிபதிகள் அமர்வு ஒவ்வொரு கார்த்திகை திருவிழாவின் போதும் தீபத்தூணில் தீபம் ஏற்ற உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனி நீதிபதி இந்த ஆண்டு தீபத்தூணில் ஏற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார். தனி நீதிபதியின் உத்தரவை 2 நீதிபதிகள் அமர்வு மாற்றி உள்ள நிலையில், இந்த நீதிமன்ற அவமதிப்பு விசாரணைக்கு உகந்ததல்ல என்றனர்.

தொடர்ந்து நீதிபதி, நீதிமன்ற உத்தரவை மதிக்கும் அடையாளமாக தீபத் தூணில் தீபம் ஏற்றப்படும் என்பதன் முன்னெடுப்பாகவே நீதிமன்றம் கூறும் 5 பேரை பூஜை செய்ய அனுமதிப்பது குறித்து முடிவெடுக்க கூறினேன் என்றார்.

அதற்கு அரசுத் தரப்பில், நீதிமன்றம் கூறுவதை ஆகம விதியின்படி செய்யலாமா என்பதை முடிவு செய்ய அறங்காவலர் குழுவின் ஆலோசனை மற்றும் துறையின் ஒப்புதல் தேவை. எனவே அவகாசம் வழங்க வேண்டும்.அறங்காவலர் குழுவினரை அவமதிப்பு வழக்கில் சேர்க்க வேண்டாம் என வாதிடப்பட்டது. நீதிபதி, தீபம் ஏற்றுவது குறித்து முடிவெடுப்பது குறித்து ஆலோசிக்கட்டும். பூஜை செய்ய அனுமதிக்கலாமே என்றார்.அதற்கு அரசுத் தரப்பில், இது மதநம்பிக்கை என்பதால், முந்தைய உத்தரவைப் போல கோயில் குருக்கள் சென்று பூஜை செய்யக்கூறலாமே என தெரிவிக்கப்பட்டது. இதற்கு ஆடேசபம் தெரிவித்த பிரதான மனுதாரர் தரப்பு, அரசு காரணம் கூறி தப்பிக்கிறது.

அரசின் பெயரை காப்பாற்ற வாதங்களை முன்வைக்கின் றனர். எனவே கால அவசாகம் வழங்கக் கூடாது என்றனர். அதற்கு நீதிபதி, எப்படிப் பார்த்தாலும் அரசு நம்முடைய அரசு. தீபம் ஏற்றுவது தொடர்பாக பழைய அறங்காவலர் குழுவால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்து முடிவெடுத்து, நடைமுறைப்படுத்த இந்து சமய அறநிலையத் துறையின் ஒப்புதலைபெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். அது தொடர்பாக முடிவெடுத்து தெரிவிக்க உத்தரவிட்டு விசாரணையை மார்ச் 18 க்கு தள்ளிவைத்தார்.

# திருச்சி ரயில்வே அலுவலக நுழைவு வாயிலின் இந்தி பெயர் நீக்கம்: திமுக போராட்டத்தின் எதிரொலி

திருச்சி, மார்ச.6-

திமுகவினர் போராட்டத்தைத் தொடர்ந்து, திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலக நுழைவு வாயிலில் இருந்த 'கர்தவ்ய த்வார்' இந்தி பெயர் உடனடியாக நீக்கப்பட்டது.திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில் உள்ள கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகத்துக்கு அண்மையில் புதிதாக நுழைவு வளைவு கட்டப்பட்டது. இதில் 'கர்தவ்ய த்வார்' என இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் மொழி பெயர்ப்பு செய்யப்படாமல், இந்தியின் உச்சரிப்பிலேயே பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.




இதற்கு முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். மேலும், இந்தி திணிப்பு நடவடிக்கையை கண்டித்து அந்த அலுவலகம் முன் நேற்று ஏராளமான திமுகவினர் திரண்டு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதற்கு கட்சியின் திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமை வகித்தார். மேற்கு மாநகரச் செயலாளர் மேயர் மு.அன்பழகன் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றனர்.அப்போது, மத்திய அரசு இந்தியை திணிப்பதாகக் கூறி கண்டன கோஷங்களை எழுப்பியதுடன், அதில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு பெயின்ட் கொண்டு அழித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, இந்த நுழைவு வாயிலின் பெயரை 'கடமையின் நுழைவுவாயில்' என தமிழில் மாற்றியமைக்கப்படும் என திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலர் தெரிவித்தார்.மேலும், நுழைவு வாயிலில் இருந்த 'கர்தவ்ய த்வார்' என இந்தி, ஆங்கிலம், தமிழில் இருந்த எழுத்துகள் உடனடியாகஅகற்றப்பட்டன.



திண்டுக்கல் சரக காவல் துணைத் தலைவராக (DIG) V. சசி மோகன் முறைப்படி பொறுப்பேற்றுக்கொண்டார்.



■ திண்டுக்கல்நத்தம் சாலையில் வாகன ஓட்டிகள் மரண பயம். நெடுஞ்சாலையில் உயிரைப் பறிக்கும் வகையில் உள்ள ஆபத்தான பள்ளத்தை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பெரிய விபத்தோ அல்லது உயிர் பலியோ ஏற்படும் முன் நெடுஞ்சாலைத்துறை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமா? என வாகன ஓட்டிகள் எதிர்பார்க்கின்றனர்.

# மடப்புரம் அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்த பெண் நீதிமன்றத்தில் ஆஜர்

மதுரை, மார்ச்.6-

மடப்புரம் அஜித்குமார் மீது நகை திருட்டுப் புகார் அளித்த பெண் நீதிமன்றத்தில் ஆஜராகி, நகை திருட்டு புகாரை முடிக்க ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

மடப்புரம் காளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார், நகை திருட்டு வழக்கு விசாரணைக்காக தனிப்படை காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதில் அவர் உயிரிழந்தார். இந்த வழக்கில் தனிப்படை காவலர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். டிஎஸ்பி, காவல் ஆய்வாளர் உட்பட 4 பேர் தேடப்பட்டு வருகின்றனர்.

இந்த வழக்கில் தனிப்படை காவலர்கள் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனு உயர் நீதிமன்றத்தில் கடந்த வாரம் விசாரணைக்கு வந்த போது, அஜித்குமார் மீது நிகிதா என்பவர் அளித்த நகை திருட்டு புகாருக்கு ஆதாரம் இல்லை என்பதால் வழக்கை முடிக்க முடிவு செய்திருப்பதாக சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



இதையடுத்து நீதிபதி, செய்யாத குற்றத்துக்கு ஒருவரை போலீஸார் அடித்துக் கொலை செய்துள்ளனர். போலீஸாருக்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். விசாரணை முடியும் வரை சிறையில் இருக்கட்டும் என்றார்.

இந்நிலையில் நகை திருட்டு புகார் அளித்த நிகிதாவை விசாரிக்க அனுமதி கோரி சிபிஐ தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை ஏற்று நிகிதா ஆஜராக நீதிபதி உத்தரவிட்டார்.

அதன்படி, மதுரை மாவட்ட கூடுதல் தலைமை குற்றவியல் நீதிபதி அசன் முகமது முன்பு நேற்று நிகிதா ஆஜரானார். அவரிடம் உங்கள் புகாரை முடித்து வைக்க சிபிஐ தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது பற்றி என்ன தெரிவிக்கிறீர்கள் என நிகிதாவிடம் நீதிபதி கேள்வி எழுப்பினார்.

அதற்கு அவர், எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை, எனது புகாரின் பேரில் பதிவு செய்த வழக்கை முடித்து விடலாம் என்றார். இதனை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய உத்தர விட்டு விசாரணையை மார்ச் 9ம் தேதிக்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

அதன்பிறகு நிகிதா செய்தியாளர்களிடம் கூறும் போது, மடப்புரம் வழக்கில் என்னைச் சுற்றி எந்த அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள் யாரும் இல்லை.

என் புகாரில் உண்மை இல்லை என சிபிஐ கூறவில்லை. ஆதாரம் இல்லை என்றுதான் கூறியுள் ளது. நகை திருடப்பட்டது தெரிந்ததும் முதலில் கோயில் அதிகாரிகளிடம் புகார் அளித்தேன்.

அதன் பிறகே காவல்துறையில் புகார் அளித்தேன். என் செல்போனை சிபிஐ அதிகாரிகள் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர். புகார் அளித்ததும் நான் மடப்புரத்திலிருந்து சென்றுவிட்டேன். அதன் பிறகு நடந்தது, அஜித்குமாரிடம் போலீஸ் விசாரித்தது பற்றி எனக்கு தெரியாது என்றார்.

# ஈரான் போர்க் கப்பலை மூழ்கடித்தது அமெரிக்க நீர்மூழ்கி 87 வீரர்கள் உயிரிழப்பு மீட்பு பணியில் இலங்கை

கொழும்பு, மார்ச்.6-

இலங்கை அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் 'ஐஆர்ஐஎஸ் டேனா' என்ற ஈரான் போர்க்கப்பல் மீது அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் தாக்குதல் நடத்தியது. அதில் இருந்த 87 வீரர்கள் உயிரிழந்தனர். அவசர அழைப்பு விடுக்கப்பட்டதால் மீட்பு பணியில் இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை ஈடுபட்டுள்ளது.



இந்தக் கப்பல் இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் கடந்த மாதம் நடந்த மிலன் 2026 கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. அணு ஆயுத தடை ஒப்பந்தத்துக்கு மறுத்த ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் படைகள் கடந்த மாதம் 28ம் தேதி போர் தொடுத்தன. ஈரான் பதில் தாக்குதலில் இறங்கியதால், அதன் கடற்படையை தகர்க்கும் பணியில் அமெரிக்க கடற்படை இறங்கியது.

ஈரான் கடற்படையில் ஒரு நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க்கப்பல்கள் இருந்தன. இவற்றில் 16 போர்க் கப்பல்களை அமெரிக்க கடற்படை அழித்தது. 'ஐஆர்ஐஎஸ் டேனா' என்ற போர்க் கப்பல் மட்டும் இந்தியாவின் ஜீஷ;றீ/ விசாகப்பட்டினத்தில் கடந்த மாதம் 18ம் தேதி முதல் 25ம் தேதி வரை நடந்த சர்வதேச கடற்படை கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றுவிட்டு, ஈரான் திரும்பிச் சென்று கொண்டிருந்தது.

இந் நிலையில் இலங்கை அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் 'டேனா' போர்க் கப்பலை, அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் டார்ப்பிடோ குண்டு மூலம் தாக்கியது. இதையடுத்து ஈரான் போர் கப்பலில் இருந்து அவசர அழைப்பு விடுக்கப்பட்டது. சர்வதேச கடல் பகுதியில் எந்த கப்பலில் இருந்து அவசர அழைப்பு விடுத்தாலும், அருகில் உள்ள நாடு மீட்புப் பணியில் ஈடுபடுவது சர்வதேச கடமை.

அதன்படி இலங்கை கடற்படை கப்பல்கள் மற்றும் விமானப்படை விமானங்கள் ஈரான் கப்பல் மூழ்கும் இடத்தில் மீட்புப் பணியை மேற்கொண்டன. இந்த கப்பலில் மொத்தம் 180 வீரர்கள் மற்றும் அதிகாரிகள் இருந்தனர். இதில் 87 வீரர்கள் உயிரிழந்தனர். 78 வீரர்கள் காயம் அடைந்தனர்.

இவர்களில் 32 கடற்படை வீரர்கள் மீட்கப்பட்டு இலங்கையின் கலே பகுதியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காணாமல் போன வீரர்களை தேடும் பணியில் இலங்கை கடற்படை கப்பல்கள் மற்றும் விமானப் படை விமானங்கள் ஈடுபட்டுள்ளன. இத்தகவலை இலங்கை நாடாளுமன்றத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத் தெரிவித்தார்.




# காரைக்குடி: குப்பைத்தொட்டியில் கிடந்த 15 பவுன் நகையை காவல் துறையிடம் ஒப்படைத்த தூய்மைப் பணியாளருக்கு குவியும் பாராட்டுகள்

காரைக்குடி, மார்ச்.6-

குப்பைத்தொட்டியில் கிடந்த 15 பவுன் நகையை காவல் துறையிடம் ஒப்படைத்த தூய்மைப் பணியாளருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது. காரைக்குடி காட்டுத் தலைவாசல் பகுதியில் டிராவல்ஸ் நடத்தி வரும் டார்ஜிலின் என்பவர் வீட்டில் 15 சவரன் தங்க நகையை அவரது குழந்தை எடுத்து குப்பைத்தொட்டியில் போட்டு உள்ளது. தினமும் குப்பைகளை சேகரித்து சென்ற செல்வி என்ற தற்காலிக துப்புரவு பணியாளர் 15 சவரன் நகைகளை மீட்டு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

அதனைத் தொடர்ந்து உரிமையாளரிடம் காரைக்குடி ஏஎஸ்பி ஆசிஷ் புனியா ஐபிஎஸ் முன்னிலையில் உரிமையாளரிடம் தங்க நகைகள் ஒப்படைக்கப்பட்டது. துப்புரவு பணியாளருக்கு நகையை பெற்ற உரிமையாளரும் காவல்துறையினரும் பாராட்டுக்கள் தெரிவித்தனர். மேலும் உரிமையாளர் சார்பில் இருபதாயிரம் ரூபாய் ரொக்க பரிசு வழங்கப்பட்டது.



■ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அம்பேத்கர் நகரில் புதியதாக ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் கலந்து கொண்டு 10 கட்டுமான தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1.64 இலட்சம் மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு . ராணி ஸ்ரீகுமார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் உள்ளனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதியில், புதியதாக ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புளியங்குடி அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் கலந்து கொண்டு 10 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.தி. சதன் திருமலை குமார் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. கோவிந்தன், புளியங்குடி நகர் மன்ற தலைவர் கௌசல்யா, ஆணையர் நாகராஜ், துணைத் தலைவர் அந்தோணிசாமி ஆகியோர் உள்ளனர்.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் நகர் பகுதியில் அமைந்துள்ள, அருள்மிகு சின்ன மாரியம்மன் திருக்கோவில் குடமுழுக்கு விழாவானது, விமர்சையாக நடைபெற்றது. விழாவில் பாரத ஜனதா கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைத் தலைவர் டாக்டர்.மதன் குமார், நகரத் தலைவர் சரவணன், நகர பொதுச்செயலாளர் மணிவாசகன், அஇஅதிமுக நகர செயலாளர் மா. ஸ்ரீதர், நகர துணை செயலாளர் ஜாபர் சாதிக், திமுக நகர் மன்ற தலைவர் பா.செல்லத்துரை, நகர மன்ற துணைத் தலைவர் கேபிஎன் மாயக்கண்ணன், அனைத்து கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர். கொடைக்கானல் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து இந்து சமூக பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். விழாவில் சிறப்பான அன்னதான நிகழ்வு நடைபெற்றது.



## வானில் கருடன் வட்டமிட வ.புதூர் அய்யனார் கோவில் கும்பாபிஷேகம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

மதுரை, மார்ச்.6-

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள வலையபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட வ.புதூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மணிகட்டிஅய்யனார், தங்கச்சிஅம்மன், ஆண்டிச்சாமி, பெரியகருப்பசாமி, சின்ன கருப்பசாமி, உள்ளிட்ட பரிவார தெய்வங்கள் திருக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் முதல் நாள் யாக வேள்வி பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி மங்கல இசை முழுங்க கோபூஜை, கணபதி பூஜை முளைப்பாரி ஊர்வலம் மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை மங்கல இசை முழங்க மகா பூர்ணாஹூதி, தீபாராதனை நடைபெற்றது. ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை, உள்ளிட்ட திருத்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் மேளதாளங்கள் முழங்க யாகசாலையை சுற்றி வலம் வந்து கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு, வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட, கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து கோவிலில் கருவறையில் உள்ள தெய்வங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு சிறப்பு பூஜைகளும் மலர் அலங்காரமும் நடைபெற்றது. இதில் ஏழு சப்த கன்னிகளாக குழந்தைகள் மஞ்சலாடை அணிந்து கலந்து கொண்டனர். தொடர்ந்து கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த உள்ளூர் மற்றும் சுற்றுவட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை மலர்களும் அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை வ.புதூர் கிராம பொதுமக்கள் மற்றும் பாலமேடு முத்தம்பலம் நாடார் வகையறாக்கள் செய்திருந்தனர். திருப்பணிக்குழு மற்றும் ஸ்ரீ முத்துக்கருப்பணசுவாமி கோவில் பங்காளிகள் செய்திருந்தனர்.

## உடுமலை அருகே ரூ. 2.88 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகள்: எம்.பி. ஈஸ்வரசாமி தொடங்கி வைத்தார்

திருப்பூர், மார்ச்.6-

திருப்பூர் மாவட்டம் உடுமலை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில், ரூ. 2 கோடியே 88 லட்சம் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்குப் பூமி பூஜை நடைபெற்று, பணிகள் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளருமான கே. ஈஸ்வரசாமி அவர்கள் இந்த நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினார்.



உடுமலை வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த குறிஞ்சேரி, சின்னவீரம்பட்டி, பெரியகோட்டை மற்றும் கணக்கம்பாளையம் ஆகிய நான்கு ஊராட்சிகளில் இந்த நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

*திட்ட விவரங்கள்:*

இத்திட்டத்தின் கீழ் உயர்தர தார்சாலைகள் அமைத்தல், முறையான மழைநீர் வடிகால் வசதிகளை உருவாக்குதல் மற்றும் தடையற்ற குடிநீர் விநியோகத்திற்காகப் புதிய குடிநீர் தொட்டிகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதன் ஒரு பகுதியாக, இந்திரா நகர் பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட புதிய பயணிகள் நிழற்குடையை எம்.பி. ஈஸ்வரசாமி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

*பங்கேற்பாளர்கள்:*

இந்த விழாவில் உடுமலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தனபால், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் ராதிகா, கணக்கம்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் லதா (எ) காமாட்சி அய்யாவு, உடுமலை ஒன்றிய முன்னாள் சேர்மன் மகாலட்சுமி முருகன், இரயில் நாகராஜ் மற்றும் ஒன்றிய, சார்பணி நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



## இதயம் முத்து அண்ணாச்சி மறைவு திசையன்விளை எலைட் ரோட்டரி கிளப் சார்பில் கண்ணீர் அஞ்சலி

திசையன்விளை, மார்ச். 06-

ரோட்டரி கிளப்பின் முன்னாள் ஆளுநரும், பிரபல 'இதயம்' நிறுவனத்தின் உரிமையாளருமான வி. ஆர். முத்து அண்ணாச்சி அவர்களின் மறைவையொட்டி, திசையன்விளை எலைட் ரோட்டரி கிளப் சார்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பட்டைய தலைவர் சாந்தகுமார், நடப்பு தலைவர் சி.ஜெ. ரமேஷ் குமார், செயலாளர் ராம் டெண்டுல்கர், பொருளாளர் சகாதேவன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் தலைவர்கள் சிவகுரு, அஜிஸ், முன்னாள் செயலாளர் தங்கையா ரமேஷ் பிரபு மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் ராம் கிஷோர் பாண்டியன், செந்தில், ஜான், பிரின்ஸ் பிரேம் ஆகியோர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர். மேலும், திரைப்பட தயாரிப்பாளரும் சக்கர வியூகம் மாவட்ட செய்தியாளருமான டி.பி. சரவணன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு அன்னாரது மறைவிற்கு இரங்கல் தெரிவித்தனர். முத்து அண்ணாச்சியின் சமூக சேவைகளையும் ரோட்டரி இயக்கத்திற்கான அவரது பங்களிப்பையும் உறுப்பினர்கள் இத்தருணத்தில் நினைவு கூர்ந்தனர்.



## திருப்பூர் பள்ளிகளில் தீயணைப்புத் துறை பாதுகாப்பு விழிப்புணர்வு போட்டிகள் நடத்தி சான்றிதழ் வழங்கல்

திருப்பூர், மார்ச். 06-

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குனர் அவர்களின் உத்தரவின்படி, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மாணவ, மாணவியருக்கான விசேஷ தீ பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

கோவை இணை இயக்குனர் மற்றும் திருப்பூர் மாவட்ட அலுவலர் ஆகியோரின் அறிவுரைப்படி, மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கடந்த மார்ச் 2ஆம் தேதி முதல் இந்த வகுப்புகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. வரும் மார்ச் 6ஆம் தேதி வரை நடைபெறும் இந்த முகாம்களில், தீ விபத்து காலங்களில் தற்காத்துக் கொள்வது மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

இதன் ஒரு பகுதியாக, மாணவர்களுக்குத் தீ பாதுகாப்பு குறித்த வினாவிடை போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெறுபவர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் ஊக்கச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் மாணவப் பருவத்திலேயே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, பேரிடர் காலங்களில் துரிதமாகச் செயல்பட உதவும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



■ தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பிரதான இணைப்புச் சங்கமாக திகழும் தமிழ்நாடு நில அளவைத்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பாக, கூடுதல் இயக்குநர் (பொது) வெங்கடேசன், கூடுதல் இயக்குநர் (மறு நில அளவை) சரவணன், இணை இயக்குநர் (நிர்வாகம்) சீனுவாச ராகவன்ஆகியோரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகளுக்கு நன்றியும், நிலுவையில் உள்ள கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றவும் வலியுறுத்தப்பட்டது.

## மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்ற ப.ஜெ. ரவிக்குமார் நெகிழ்ச்சியான நன்றியுரை

சென்னை, மார்ச் 06-

தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவராகப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள திரு. ப.ஜெ. ரவிக்குமார் அவர்கள், தனக்கு வாழ்த்துத் தெரிவித்த அனைத்து சங்க நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின் அங்கீகாரம் பெற்ற முதன்மைச் சங்கங்களான மருத்துவத்துறை, கல்வித்துறை, சுகாதாரப் பணித்துறை, வேளாண்மைத் துறை, தமிழ்நாடு செவிலியர் சங்கம், அங்கன்வாடி மற்றும் சத்துணவுப் பணியாளர் சங்கம், டாஸ்மாக் பணியாளர் சங்கம் மற்றும் நமது இணைப்புச் சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.மேலும், ஒன்றியத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், மேனாள் தலைவர்கள், மேனாள் பொதுச்செயலாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் என அனைவரும் வழங்கிய ஊக்கத்திற்கும் வாழ்த்திற்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாக இருப்பேன். இப்பொறுப்பின் மூலம் அரசு ஊழியர்களின் நலனுக்காகவும், சங்கத்தின் வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவேன் என அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.












SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000